கூடாது. சமாரியப் பெண் தனது பட்டணத்திலுள்ள ஆண்களோடு கிறிஸ்துவைக் குறித்த செய்தியைப் பகிர்ந்துகொண்டாள், பலர் அவரை விசுவாசித்தார்கள் [பார்க்க, யோவான் 4:28–30, 39]. ''தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி ... நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துவந்தாள்'' என்று நாம் வாசிக்கிறோம் [அப். 9:36]. ஒரு பெண்ணே அடக்கத்துக்காக இயேசுவை அபிஷேகம் செய்தாள். பல ஆண்கள் அதைக்குறித்துக் குறைசொல்லியபோது இயேசு அவளைப் பாராட்டினார் [பார்க்க, மாற்கு 14:3–9]. இறுதியாக, இயேசுவானவர் எருசலேம் வழியாகச் சிலுவையைச் சுமந்து சென்றபோது, பெண்களே அழுது கண்ணீர் வடித்தார்கள் என்றும் நாம் வாசிக்கிறோம். ஆண்களைக் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. இவைகளும் இன்னும் பல எடுத்துக்காட்டுகளும் பெண்கள் எழுந்து, தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் எல்லோருமே நமக்குத் தேவைப்படுகிறார்கள்!



# 13

# விவாகரத்தும் மறு திருமணமும்

விவாகரத்தையும் மறுதிருமணத்தையும் குறித்து உண்மையுள்ள கிறிஸ்தவர்களின் மத்தியில் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. இரண்டு அடிப்படையான கேள்விகளே விவாதத்தைத் தூண்டுகின்றன: 1] தேவன் விவாகரத்தை அனுமதிக்கிறாரா? அப்படியானால் எப்போது அதை அனுமதிக்கிறார்? 2] தேவனுடைய பார்வையில் மறுதிருமணம் எப்போது அனுமதிக்கப்படுகிறது? எதை அனுமதிப்பது, எதை அனுமதிப்பதில்லை என்பதைக் குறித்துப் பெரும்பாலான சபைப்பிரிவுகளும், தனிப்பட்ட சபைகளும், வேதவசனங்களுக்குத் தாங்கள் அர்த்தம் காணுவதின் அடிப்படையில் அதிகாரபூர்வமான கோட்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய உறுதிப்பாடுகள் தேவன்மீதான அன்பினால் தூண்டப்பட்டிருக்குமானால், அவர்களுடைய உறுதிப்பாடுகளுக்காகவும், அவைகளுக்கேற்றபடி அவை நடப்பதற்காகவும் அவைகளை மதிக்கிறோம். என்றாலும் நாம் எல்லோரும் 100 சதவீதம் வேதாகமரீதியான உறுதிப்பாட்டைக் கொண்டிருப்பது நல்லதாகும். தேவனுடைய நோக்கத்துக்குக் குறைவுபடும் ஒன்றைச் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் போதிக்கக் கூடாது. மக்கள் சுமக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டிராத பாரங்களை அவர்கள் மக்களின்மீது சுமத்தவும் கூடாது. இந்த இலக்கைக் கருத்தில்கொண்டு கருத்து வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படும் இந்தக் கருப்பொருளைக் குறித்த வேதவசனங்களுக்கு என்னால் முடிந்த வரை சிறப்பாக அர்த்தம்காணப் போகிறேன். ஒப்புக்கொள்ளுவதா வேண்டாமா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

உங்களைப்போலவே நானும் உலகத்தில் இப்போது விவாகரத்துக்கள் பெருகிவருவதைக் குறித்து அதிகமாக வேதனைப்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கிறிஸ்தவர்களாக அறிக்கையிடுகிறவர்களும், ஊழியத்தில் இருப்பவர்களும் விவாகரத்துச் செய்வது

அதிகமான துக்கத்தை உண்டாக்குகிறது. இது பெரிய அவல நிகழ்வாகும். இன்னுமதிகமாக இது நடப்பதைத் தவிர்க்க நம்மால் முடிந்த எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும். இந்த விவாகரத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குச் சிறப்பான வழி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, மனந்திரும்பும்படி அழைப்பு விடுப்பதாகும். திருமணமான இருவர் மெய்யாகவே மறுபடியும் பிறந்தவர்களாகவும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகவும் இருந்தால், அவர்கள் ஒருபோதும் விவாகரத்து செய்துகொள்ள மாட்டார்கள். சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தனது முன்மாதிரியே பிரசங்கிப்பதைவிட வலுவானது என்பதை உணர்ந்து, தனது சொந்தத் திருமண வாழ்க்கையை வலுவாக்கும்படி தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வார்.

நான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் திருமண வாழ்வில் சந்தோஷமாக இருந்துவருகிறேன். நான் இதற்கு முன்பு வேறு திருமணம் செய்துகொண்டது கிடையாது. விவாகரத்து செய்துகொள்ளுவதைக் கற்பனைசெய்துகூட என்னால் பார்க்க முடியவில்லை. எனவே, எனக்காக நான் விவாகரத்தைக் குறித்த வேதவசனங்களை மட்டுப்படுத்துவது அவசியமில்லை. என்றாலும், விவாகரத்து செய்துகொண்டவர்கள்மீது அதிகமாகப் பட்சாதாபம் கொள்ளுகிறேன். நான் என் இளவயதில் தவறான தீர்மானம் எடுத்திருந்தால் பின்னால் அந்தப் பெண்ணை விவாகரத்து செய்யும்படி சோதிக்கப்பட்டிருப்பேன். நான் இப்போது திருமணம் செய்துகொண்டிருக்கும் அற்புதமான பெண்மணியைப் போலல்லாமல் என்னைச் சகித்துக்கொள்ளாத ஒரு பெண்ணை நான் மணந்துகொண்டிருந்தாலும், அது விவாகரத்தில்தான் முடிந்திருக்கும். தேவனுடைய கிருபையின் காரணமாகவே இந்த நிலை எனக்கு ஏற்படவில்லை. திருமணமான பலரால் என்னுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன். எனவே விவாகரத்து செய்துகொண்டவர்களை நோக்கி நாம் கற்களை வீசாதிருப்போமாக. அவர்கள் எவைகளைச் சகித்துக்கொண்டார்கள் என்பதை அறியாமல் அவர்களைக் குற்றம் சாட்டுவதற்கு நாம் யார்? ஒருவேளை அவர்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலைகள் நமக்கும் ஏற்பட்டிருக்குமானால், நாம் அவர்களைவிட விரைவாகவே மணமுறிவில் ஈடுபட்டிருக்கலாம் என்பதைத் தேவனே அறிவார், அவர் ஒருவேளை அவர்களை நம்மைவிட அதிக நீதியுள்ளவர்களாகக் காணலாம்.

திருமணம் செய்துகொள்ளும் எவரும் இறுதியில் விவாகரத்து செய்துகொள்ளலாம் என்று எதிர்பார்ப்பதில்லை. விவாகரத்தினால் பாடுகளை அனுபவித்தவர்களைவிட அதை அதிகமாக வெறுப்பவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது என்றே நான் நினைக்கிறேன். எனவே திருமணம் செய்தவர்கள் மண உறவில் நிலைத்திருக்கும்படியாகவும்,





விவாகரத்து செய்துகொண்டவர்கள் தேவனுடைய கிருபையைக் கண்டுகொள்ளும்படியாகவும் நாம் உதவ வேண்டும். இந்தத் துடிப்போடுகூடத் தான் நான் இதை எழுதுகிறேன்.

வேதவசனமே வேதவசனத்துக்கு அர்த்தம் கொடுக்கும்படி நான் என்னால் முடிந்தவரை அனுமதிக்கப் போகிறேன். இதைக் குறித்த பல வசனங்கள் மற்ற வேதவசனங்களுக்கு முரண்பாடாக இருக்குமளவுக்கு மாற்றிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நான் அறிவேன். எனவே இந்த வசனங்கள் ஓரளவுக்காவது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றன என்பது நிச்சயமாகும்.

## ஒரு அஸ்திபாரம்

நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஒரு அஸ்திபாரமான சத்தியத்தோடு நாம் துவங்குவோம். பொதுவாக தேவன் விவாகரத்துக்கு விரோதமாக இருக்கிறார் என்று வேதவசனம் உறுதிப்படுத்துகிறது. சில இஸ்ரவேலர் தங்கள் மனைவிமார்களை விவாகரத்து செய்த வேளையில் அவர் மல்கியா தீர்க்கதரிசியின் மூலமாக இப்படி அறிவித்தார்:

> தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் ... அப்படிப் பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் ... ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் [மல்கியா 2:16].

தேவனுடைய அன்பானதும் நீதியுள்ளதுமான குணாதிசயத்தை அறிந்திருப்பவர்களுக்கும், விவாகரத்து எப்படி கணவனுக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் பாதிப்பை உண்டாக்குகிறது என்பதை அறிந்தவர்களுக்கும் இது வியப்பான காரியமாக இருக்காது. பொதுவான வகையில் விவாகரத்துக்கு ஆதாரவாக இருக்கும் ஒருவரின் நல்லொழுக்கப் பண்பைக் குறித்து நாம் சந்தேகப்படவே வேண்டும். தேவன் அன்பாகவேயிருக்கிறபடியால் [பார்க்க, 1 யோவான் 4:6] அவர் தள்ளிவிடுதலை வெறுக்கிறார்.

ஒருமுறை சில பரிசேயர் இயேசுவிடம் வந்து ‘‘எந்த முகாந்திரத்தினாலாவது’’ தள்ளிவிடுதல் நியாயமானதா என்று கேள்வியெழுப்பினார்கள். அவருடைய பதில் அடிப்படையில் அவர் விவாகரத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது. உண்மையில்,எவரும் விவாகரத்து செய்துகொள்ள வேண்டுமென்று அவர் நினைக்கவில்லை.

> அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந் திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமா யிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார் [மத். 19:3–6].

இயேசுவானவரின் நாட்களின் வரலாற்றைப் பார்க்கும்போது, யூத சமயத் தலைவர்களின் மத்தியில் இரண்டு வகைப்பட்ட சிந்தனைகள் காணப்பட்டன என்பதை நாம் அறிகிறோம். பின்னொரு இடத்தில் நாம் இதைக்குறித்து விரிவாகப் பார்ப்போம். இப்போது அந்தக் குழுவினரில் ஒருசாரார் பழமைவாதிகளாகவும், ஒரு சாரார் தாராளமானவர்களாகவும் இருந்தார்கள். மிகவும் தீவிரமான நல்லொழுக்கக் காரணங்களுக்காக மட்டுமே மனைவியை விவாகரத்து செய்யலாம் என்று பழமைவாதிகள் நம்பினார்கள். தாராளமானவர்கள் எந்தவொரு காரணத்துக்காகவும், மற்றொரு கவர்ச்சிகரமான பெண்ணைக் கண்டாலும்கூட, விவாகரத்து செய்துகொள்ளலாம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள். இந்த முரண்பாடான உறுதிப்பாடுகளே பரிசேயர் இயேசுவிடம் கேட்ட கேள்விக்கு அடிப்படையாக இருந்தன.

ஆணையும் பெண்ணையும் தாற்காலிகமாக அல்ல, *நிரந்தரமாக* ஒன்றாக இணைப்பதே தேவனுடைய ஆதித் திட்டமாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட ஆதியாகமத்தின் முதல் பக்கங்களிலுள்ள வசனங்களை இயேசுவானவர் சுட்டிக்காட்டுகிறார். தேவன் திருமண உறவைக் கருத்தில்கொண்டே இரு பாலாரையும் சிருஷ்டித்தார் என்று மோசே அறிவித்தார். திருமண உறவானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உறவாக இருக்கிறபடியால், அதுவே அடிப்படை உறவாக இருக்கிறது. அதை ஏற்படுத்தியபிறகு, அது ஒருவன் தன் பெற்றோருடன் கொண்டிருக்கும் உறவைவிட மேலானதாக ஆகிவிடுகிறது. ஆண்கள் தங்கள் மனைவியோடு *இசைந்திருக்கும்படி* பெற்றோரை *விடுகிறார்கள்.*

மேலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள பாலுறவு ஐக்கியம் அவர்கள் ஒருவராயிருப்பார்கள் என்ற தேவனுடைய ஒழுங்கைச் சுட்டிக்காட்டுகிறது. சந்ததியினரைக் கொடுக்கும் இப்படிப்பட்ட உறவு தாற்காலிகமாக இருப்பது அல்ல, நிரந்தரமாக இருப்பதே தேவனுடைய நோக்கமாகும். பரிசேயர்கள்





அப்படிப்பட்டதொரு கேள்வி கேட்டதே இயேசுவுக்குப் பிடிக்கவில்லை என்பது அவருடைய பதிலின் தொனியிலிருந்தே தெரிகிறது. கண்டிப்பாக ‘‘எந்த முகாந்தரத்தினாலாகிலும்’’ ஆண்கள் தங்கள் மனைவிமாரைத் தள்ளிவிடலாம் என்பது *நிச்சயமாகத்* தேவனுடைய நோக்கமாக இருக்கவில்லை.

உண்மையில், எவரும் எந்த வழியிலும் பாவம் செய்வதும்கூட தேவனுடைய நோக்கம் கிடையாது, ஆனால் நாம் எல்லோருமே பாவம் செய்திருக்கிறோம். தேவன் தமது இரக்கத்தினால் நாம் பாவத்துக்கு அடிமையாக இருப்பதிலிருந்து விடுவிக்கப்படும் வழிவகையைக் கொடுத்திருக்கிறார். அவர் நாம் செய்ய வேண்டாம் என்று அவர் எதிர்பார்ப்பதை நாம் செய்துவிட்டபிறகு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். இதைப்போலவே, எவரும் விவாகரத்து செய்துகொள்ளுவது தேவனுடைய நோக்கமல்ல. ஆனால் தேவனுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தாதவர்களின் மத்தியில் விவாகரத்து தவிர்க்க முடியாததாக இருக்கிறது. முதல் விவாகரத்தோ அல்லது தொடர்ந்து வரும் இலட்சகணக்கான விவாகரத்தோ தேவனுக்கு வியப்பைக் கொடுக்கவில்லை. எனவே அவர் விவாகரத்தைக் குறித்த தமது வெறுப்பை அறிவிப்பதோடு மட்டுமின்றி, அப்படி விவாகரத்துப் பெற்றவர்களுக்கும் சில காரியங்களைச் சொல்லுகிறார்.

**துவக்கத்தில்...**

இந்த அஸ்திபாரத்தோடுகூட, தேவன் விவாகரத்து மற்றும் திருமணத்தைக் குறித்து அறிவித்திருப்பவைகளை நாம் திட்டவட்ட மாகப் பார்ப்போம். இயேசுவானவர் இஸ்ரவேலரிடம் கூறியவைகளே விவாகரத்து மற்றும் திருமணத்தைக் குறித்த வாத எதிர்வாதங்களை அதிகமாகக் கிளப்பியிருக்கிறபடியால், இதைக் குறித்து நூற்றுக்கணக் கான ஆண்டுகளுக்கு முன்னர் தேவன் இஸ்ரவேலருக்கு என்ன கூறினார் என்பதை முதலில் ஆய்வுசெய்வது நமக்கு உதவியாக இருக்கும். தேவன் மோசேயின் மூலமாகச் சொன்னதற்கும், தேவன் இயேசுவின் மூலமாகச் சொன்னதற்கும் இடையே முரண்பாடு காணப் படுவதுபோலத் தோன்றினால், தேவனுடைய பிரமாணம் மாறவில்லை, மோசே கூறியதிலோ அல்லது இயேசு கூறியதிலோ நாம்தான் எதையோ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதுதான் சரியாகும். எனவே தேவன் முதலில் விவாகரத்து மற்றும் திருமணத்தைக் குறித்துக் கூறிய காரியங்களை நாம் பார்ப்போம்.

இயேசுவானவரைப் பொருத்தவரையில் ஆதியாகமம் 2ஆம் அதிகாரத்திலுள்ள பகுதி விவாகரத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இந்த முறை ஆதியாகமத்திலிருந்து அதை நேரடியாகவே வாசிப்போம்.

தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப் படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப் பார்கள் [ஆதி. 2:22–24].

இதுவே திருமணத்தின் துவக்கமாகும். தேவன் முதலாவது மனிதனுக்*காக*, முதலாவது மனிதனி*லிருந்து* முதலாவது பெண்ணை உருவாக்கி, *தனிப்பட்ட முறையில்* அவளை அவனிடம் கொண்டு வந்தார். இயேசுவானவர் சொல்லியபடி ''*தேவன்* [ஒன்றாக] இணைத்தார்'' [மத். 19:6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. தேவனால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த முதல் திருமணம் அடுத்துவந்த எல்லாத் திருமணங்களுக்கும் ஒழுங்காக அமைந்தது. தேவன் ஆண்களைப் போன்ற அதே எண்ணிக்கையில் பெண்களைச் சிருஷ்டிக்கிறார். எதிர்பாலாரால் கவரப்படும்படி அவர்களைச் சிருஷ்டிக்கிறார். எனவே, [இப்போது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இருந்ததைவிட, பொருத்தமான வர்களைக் கண்டுபிடிக்க எண்ணற்ற வாய்ப்புகள் இருந்தாலும்] தேவன் இன்றும்கூடப் பெரிய அளவில் திருமணங்களை ஒழுங்கு செய்கிறார் என்று சொல்லலாம். எனவே, இயேசுவானவர் சுட்டிக்காட்டியபடி, *தேவன்* ஒன்றாக இணைத்ததை எந்த *மனிதனும்* பிரிக்கக் கூடாது. முதல் தம்பதியர் தனித்தனியாக வாழ வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கவில்லை. பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதின்மூலம் அவர்கள் ஆசீர்வாதத்தைக் கண்டடைய வேண்டு மென்றே அவர் விரும்பினார். தேவனால் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ள அவருடைய சித்தத்தை மீறுவது பாவமாகும். எனவே, ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரத்திலிருந்து விவாகரத்து என்பது எந்தத் திருமணத்தையும் குறித்த தேவனுடைய நோக்கம் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

## இருதயத்தில் எழுதப்பட்ட தேவனுடைய பிரமாணம்

ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தை வாசித்திராதவர்களும் கூட உணர்வுபூர்வமாக விவாகரத்து தவறு என்பதை உணர்ந்திருக் கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எந்த வேதாகம அறிவும் இல்லாத புறஜாதியார் மத்தியில் வாழ்நாள் முழுவதுக்குமான திருமண உடன்படிக்கை செய்துகொள்ளப்படுகிறது. பவுல் ரோமருக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:





அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிற போது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர் களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிற தினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர் களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிற தினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார் கள் [ரோமர் 2:14–15].

தேவனுடைய நல்லொழுக்க பிரமாணங்கள் ஒவ்வொரு மானிட இருதயத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதாமின் காலத்திலிருந்து இயேசுவின் காலம் வரையில் தேவன் இஸ்ரவேலருக்கே பிரமாணங் களைக் கொடுத்தார். ஆனால் மனச்சாட்சியின் மூலமாகப் பேசப்படும் நல்லொழுக்கப் பிரமாணமும் தேவன் கொடுத்ததேயாகும். விவாகரத் தைக் குறித்து நினைக்கும் *எவரும்* தனது மனச்சாட்சிக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அவர் தனது மனச்சாட்சியை மேற்கொள்ளுவதற்குச் சரியான வழி தனது செயலை நியாயப்படுத்த சரியான வழியைக் கண்டுபிடிப்பதாகும். சரியான வகையில் நியாயப் படுத்தாமல் அவர் விவாகரத்தில் ஈடுபடுவாரானால், அவருடைய மனச் சாட்சி அவரைக் குற்றப்படுத்தும். அதை அவர் அடக்க வேண்டி யிருக்கும்.

ஆதாமின் காலத்திலிருந்து மோசேக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட கி.மு. 1440ஆம் ஆண்டு வரையில் 27 தலைமுறை களாக மனச்சாட்சியின் பிரமாணத்தைத் தவிர வேறு பிரமாணங்கள் கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேலருக்கும்கூட தேவன் திருமணம் மற்றும் விவாகரத்து குறித்த எந்தப் பிரமாணமும் கொடுக்கவில்லை. மனச்சாட்சியின் பிரமாணமே போதுமானது என்று அவர் நினைத்திருந்தார். [யாத்திராகம காலம் வரையில் மோசே ஆதி யாகமத்தை எழுதவில்லை என்பதை நினைவில் வைத்திருங்கள்]. மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு முற்பட்ட அந்த 27 தலைமுறை களில், நோவாவின் ஜலப்பிரளயம் உட்பட்ட இந்த காலகட்டத்தில், நடைபெற்ற இலட்சக்கணக்கான திருமணங்களில் ஒரு சில திருமணங்களாவது விவாகரத்தில் முடிந்திருக்கக் கூடும் என்று நாம் எண்ணலாம். ஒருபோதும் மாறாத தேவன், விவாகரத்தின் குற்றத்தைச் செய்தவர்கள் மனந்திரும்பினால் அவர்களை மன்னிக்கச் சித்தமாயிருந்தார் என்றும் நாம் முடிவுக்கு வரலாம். மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக, ஆபிரகாமைப் போலத் தங்கள் விசுவாசத்தின் காரணமாக மக்கள் இரட்சிக்கப்பட

அல்லது தேவனால் நீதிமான் என்று அறிவிக்கப்பட முடிந்தது என்பதையும் நாம் அறிகிறோம் (பார்க்க, ரோமர் 4:1–12). ஆதாமிலிருந்து மோசே வரையில் மக்கள் தங்களுடைய விசுவாசத்தின் காரணமாக நீதிமான்களாக அறிவிக்கப்பட முடிந்தது என்றால், அவர்கள் மன்னிக்கப்படக் கூடும், விவாரகரத்தினால் ஏற்பட்ட குற்றத்திற்கும் மன்னிப்பைப் பெற முடியும் என்பது தெளிவாகிறது. *மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு முன்னால் விவாகரத்தின் பாவத்துக்கு உட்பட்டு, பின்னர் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற்றவர்கள், மறு திருமணம் செய்துகொண்டால் குற்றவாளிகளாகத் தங்கள் மனச்சாட்சியால் (ஏனென்றால் வேறு எழுதப்பட்ட பிரமாணம் எதுவும் கிடையாது) உணர்த்தப்படுவார்களா* என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

தங்களுடைய தவறினால் இல்லாமல், தங்கள் கணவன் அல்லது மனைவியின் சுயநலத்தினால் விவாகரத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிற *பாதிக்கப்பட்டவர்களைக்* குறித்து என்ன? அவர்களுடைய மனச்சாட்சி அவர்கள் மறுபடியும் திருமணம் செய்துகொள்ளாமல் அவர்களைத் தடுத்திருக்குமா? அப்படியிருக்காது என்றே எனக்குத் தோன்றுகிறது. மற்றொரு பெண்ணுக்காக கணவன் மனைவியைக் கைவிட்டிருப்பான் என்றால், தான் மறுபடியும் திருமணம் செய்யக் கூடாது என்ற முடிவுக்கு அவளை வழிநடத்தக் கூடியது எது? அவள் விவாகரத்துச் செய்யப்பட்டது அவளுடைய சொந்தத் தவறினால் அல்ல.

### மோசேயின் நியாயப்பிரமாணம்

வேதாகமத்தின் மூன்றாவது புத்தகத்துக்கு வரும்போதுதான் விவாகரத்தும் மறுமணமும் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஆசாரியர்கள் விவாகரத்துப் பெற்ற பெண்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது:

> அவர்கள் தங்கள் தேவனுக்குப் பரிசுத்தமானவர்கள், ஆகையால் வேசியையாகிலும் கற்புக்குலைந்தவளையாகிலும் விவாகம்பண்ணார்களாக; தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம் பண்ணார்களாக (லேவி. 21:7).

மோசேயின் நியாயப்பிரமாணத்தில் வேறு எங்கேயும் இஸ்ரவேலின் ஆண்களுக்கு இப்படிப்பட்ட பொதுவான தடை கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இப்போது பார்த்த வசனத்தின்மூலம் 1) இஸ்ரவேலில் தள்ளப்பட்ட பெண்கள் இருந்தார்கள். 2) இப்படித் தள்ளப்பட்ட பெண்களை ஆசாரியரல்லாத மற்ற இஸ்ரவேலரில் யாராவது திருமணம் செய்துகொள்ளுவது தவறான காரியமல்ல போன்ற காரியங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. மேலே கொடுக்கப்பட்டுள்ள பிரமாணம் ஆசாரியர்





களுக்கும், ஆசாரியர்களைத் திருமணம் செய்துகொள்ளப் போகும் தள்ளப்பட்ட பெண்களுக்கும் மட்டுமே உரியதாகும். மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாக தள்ளப்பட்ட ஒரு பெண் ஆசாரியனைத் தவிர வேறு ஆண்களைத் திருமணம் செய்துகொள்ளுவதைக் குறித்து எந்தத் தடையும் இல்லை. ஆசாரியனைத் தவிர, வேறு எந்த ஆணும் தள்ளப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளுவதில் தவறு இல்லை.

சாதாரண ஆசாரியர்களைவிட பிரதான ஆசாரியன் (கிறிஸ்துவுக்கு ஒரு மாதிரி) இன்னும் மேலான தகுதிநிலைகளின்படி வாழுவது எதிர்பார்க்கப்பட்டது. அவர் ஒரு *விதவையைத்* திருமணம் செய்து கொள்ளுவதுகூடத் தடை செய்யப்பட்டுள்ளது. அடுத்த சில வசனங்களில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புக் குலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம்பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம்பண்ணக்கடவன் (லேவி. 21:14).

இஸ்ரவேலரின் விதவைகள் *எல்லோருமே* மறுமணம் செய்துகொள்ளுவது தவறு என்று இந்த வசனம் சொல்லுகிறதா, அல்லது இஸ்ரவேலின் *எல்லா* ஆண்களும் விதவைகளைத் திருமணம் செய்துகொள்ளுவது தவறு என்று இந்த வசனம் சொல்லுகிறதா? இல்லை, நிச்சயமாக இல்லை. *எந்த* ஒரு விதவையும் பிரதான ஆசாரியனை மறுமணம் செய்துகொள்ளாமல் வேறு *எந்த* ஆண்களைத் திருமணம் செய்து கொள்ளுவதில் எந்தத் தவறும் இல்லை என்றே இந்த வசனம் சொல்லுகிறது. பிரதான ஆசாரியனைத் தவிர எவரும் ஒரு விதவையை மணந்துகொள்ளலாம் என்று இந்த வசனம் சொல்லுகிறது. விதவைகள் மறுமணம் செய்துகொள்ளுவதை வேறு வேதவசனங்களும் ஆதரிக்கின்றன (பார்க்க, ரோமர் 7:2–3; 1 தீமோ. 5:14).

நாம் ஏற்கெனவே பார்த்த வசனத்தோடு (லேவி. 21:7), இந்த வசனத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, எந்த இஸ்ரவேலரும் (ஆசாரியனையோ அல்லது பிரதான ஆசாரியனையோ தவிர) ஒரு தள்ளப்பட்ட பெண்ணையோ அல்லது கன்னிகையாக இல்லாத பெண்ணையோ அல்லது ‘‘வேசியையானாலும்’’ திருமணம் செய்து கொள்ளலாம் என்று தெரிகிறது. இதைப்போலவே, மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, தள்ளப்பட்ட பெண் திருமணம் செய்துகொள்ளுவதிலோ அல்லது ‘‘வேசியானவள்’’ திருமணம் செய்துகொள்ளுவதிலோ அவர்கள் ஆசாரியனைத் திருமணம் செய்துகொள்ளாமல் வேறு ஆண்களைத் திருமணம் செய்துகொள்ளுவதில் தவறு எதுவும் கிடையாது. தேவன் வேசித்தனத்துக்கும்,விவாகரத்துக்கும் எதிரான

வராக இருந்தாலும், கிருபையாக வேசித்தனக்காரர்களுக்கும் தள்ளப்பட்டவர்களுக்கும் மறுவாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்.

### மறுமணத்துக்கு எதிரான இரண்டாவது திட்டவட்டமான தடை

தள்ளப்பட்ட பெண்களுக்கு தேவன் எத்தனை ‘‘இரண்டாவது வாய்ப்புக்களைக்’’ கொடுக்கிறார்? மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாகத் தேவன் தள்ளப்பட்ட பெண்கள் ஒரு முறை மட்டுமே மறுமணம் செய்துகொள்ள அனுமதித்து, அவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பை மட்டுமே கொடுக்கிறாரா? இது தவறான முடிவாகும். பின்னர் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> ஒருவன் ஒரு ஸ்திரியை விவாகம்பண்ணிக்கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம். அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போன பின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளிதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்துபோனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக் கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணாயாக (உபா. 24:1—4).

இந்த வசனங்களில் தடைசெய்யப்பட்டிருக்கும் ஒரே காரியம் இருமுறை தள்ளப்பட்ட பெண் (அல்லது ஒருமுறை தள்ளப்பட்டு, ஒருமுறை விதவையாகிய பெண்) தனது முதல் கணவனைத் திரும்பவும் விவாகம் செய்துகொள்ளக் கூடாது என்பதாகும். அவள் இரண்டாவது மறுமணம் செய்துகொள்ளும்போது குற்றவாளியாகிறாள் என்று சொல்லப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது முறை அவள் தள்ளப்பட்ட பிறகு (அல்லது இரண்டாவது கணவனால் விதவையாகும் போது) முதல் கணவனிடம் அவள் திரும்பிப் போவது *மட்டுமே* தடை செய்யப்பட்டுள்ளது. அவள் *வேறு யாரையும்* (அவளுக்கு வாய்ப்புக் கொடுக்கத் துணிந்து முன்வரும் எவரையும்) திருமணம் செய்துகொள்ள





சுயாதீனமுள்ளவளாக இருக்கிறாள். அவள் வேறு எவரையும் மறுமணம் செய்துகொள்ளுவது பாவமாக இருக்குமானால், தேவன் இப்படிப்பட்ட தெளிவான விவரங்களைக் கொடுப்பதற்கு அவசியமிருக்காது. ‘‘விவாகரத்துப் பெற்றவர்கள் மறுமணம் செய்துகொள்ளுவது மறுக்கப்படுகிறது’’ என்று மட்டுமே அவர் சொல்லியிருக்கலாம்.

மேலும், தேவன் இந்தப் பெண் இரண்டாவது முறை திருமணம் செய்துகொள்ள அனுமதித்திருப்பாரானால், அவள் தள்ளப்பட்ட பிறகு அவளைத் திருமணம் செய்துகொண்டவனும் குற்றவாளியாக இருக்க முடியாது. மூன்றாவது முறையும் அவள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பாளானால், அவள் இருமுறை தள்ளப்பட்ட பிறகும் அவளைத் திருமணம் செய்துகொண்டிருப்பவனும் (அவன் அவளுடைய முதல் கணவனாக இராவிட்டால்) குற்றவாளியாக ஆகமாட்டான். இப்படியாக விவாகரத்தை வெறுக்கும் தேவன் விவாகரத்துப் பெற்ற மக்களின்மீது அன்புகாட்டியிருக்கிறார். அவர் இரக்கத்தோடு அவர்களுக்கு இரண்டாவது வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்.

### ஒரு சுருக்கம்

நாம் இது வரை கண்டறிந்தவைகளின் சுருக்கத்தைப் பார்ப்போம். *தேவன் தாம் விவாகரத்தை வெறுப்பதாக அறிவித்தாலும், மறுமணம் ஒரு பாவம் என்று அவர் பழைய உடன்படிக்கைக்கு முன்னாலும், பழைய உடன்படிக்கையின் காலத்திலும் அறிவிக்கவில்லை. ஆனால் இரண்டு விதிவிலக்குகள் உண்டு: 1) இருமுறை தள்ளப்பட்டு அல்லது ஒருமுறை தள்ளப்பட்டு, ஒரு முறை விதவையாகிய பெண் தனது முதல் கணவனை மறுபடியுமாகத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. 2) தள்ளப்பட்ட பெண் ஒரு ஆசாரியனைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. மேலும், ஆசாரியர்களைத் தவிர மற்றவர்கள் தள்ளப்பட்ட பெண்களை மறுமணம் செய்துகொள்ளுவது பாவம் என்றும் தேவன் குறிப்பிடவில்லை.*

இது தள்ளப்பட்டவர்களைக் குறித்தும், தள்ளப்பட்டவர்களை மறுமணம் செய்துகொள்ளுபவர்களைக் குறித்தும் இயேசுவானவர் கூறியிருப்பதற்கு முரண்பாடாக இருப்பதுபோலத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட மக்கள் விபசாரம் செய்தவர்களாவார்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார் (பார்க்க, மத். 5:32). எனவே நாம் இயேசுவையோ அல்லது மோசேயையோ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் அல்லது தேவன் தமது பிரமாணத்தை மாற்றிக்கொண்டிருக்கிறார். இயேசு போதித்ததை நாம் தவறாகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே என்னுடைய சந்தேகமாகும். ஏனென்றால் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்தின்மூலமாக 1500 ஆண்டுகளுக்கு நல்லொழுக்கரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றைத் திடீரென்று

நல்லொழுக்கரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று என்று தேவன் அறிவிப்பது விநோதமாகவே தோன்றுகிறது.

இப்படித் தெளிவாகத் தெரியும் முரண்பாட்டைக் குறித்து மேலும் பார்ப்பதற்கு முன்பாக, தேவன் பழைய உடன்படிக்கையின் கீழாக மறுமணத்துக்கு அனுமதித்திருப்பதற்கு ஒருவர் தள்ளப்பட்டதற்கான காரணங்களையோ அல்லது விவாகரத்தினால் ஏற்பட்டிருக்கும் குற்றத்தின் அளவையோ அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேவன் ஒருபோதும் தள்ளப்பட்ட சிலர் மறுமணம் செய்துகொள்ளத் தகுதிபெறவில்லை, ஏனென்றால் நியாயமான காரணங்களுக்காக அவர்கள் தள்ளப்பட வில்லை என்று ஒருபோதும் சொல்லியிருக்கவில்லை. தங்களுடைய விவாகரத்து நியாயமானதாக இருக்கிறபடியால் அவர்கள் மட்டும் மறுமணம் செய்துகொள்ளத் தகுதியுடையவர்களாக ஆகிறார்கள் என்று தேவன் சொல்லியிருக்கவில்லை. ஆனால் ஒருபக்கத்தினரின் சாட்சி யைக் கேட்டு இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்புகளை அளிக்க இப்போதைய ஊழியர்கள் முன்வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, தள்ளப்பட்ட ஒரு பெண் தான் இந்த விவாகரத்தின்மூலம் பாதிக்கப்பட்டவளாக இருக்கிறபடியால் மறுமணம் செய்துகொள்ளும் தகுதி தனக்கு உண்டு என்று தன் போதகரோடு வாதிடுகிறாள். அவளுடைய முன்னாள் கணவனே அவளை விவாகரத்துச் செய்துவிட்டான் – அவள் அல்ல. ஆனால் இந்த முன்னாள் கணவன் என்ன சொல்லுகிறான் என்று கேட்கும் வாய்ப்பு போதகருக்குக் கொடுக்கப்பட்டால், அவர் ஒருவேளை அவனுக்காகப் பரிதாபப்படலாம். அவள் ஒருவேளை கொடுமையாக நடந்துகொண்டிருக்கலாம், குற்றத்தில் அவளுக்கும் பங்குண்டு.

தன் கணவனையோ அல்லது மனைவியையோ முதலில் விவாகரத்துக்காக விண்ணப்பிக்கும்படி தூண்டிவிடும் மனைவிகளையும் கணவன்மாரையும் நான் அறிவேன். இதன் மூலம் விவாகரத்துக்கு யார் காரணம் என்ற குற்றத்திலிருந்து இவர்கள் தப்பிக்கொள்ள முயலு கிறார்கள். பின்னாளில் தாங்கள் அல்ல தங்கள் கணவனோ அல்லது மனைவியோதான் விவாகரத்துக்கான வழக்கைத் துவங்கினார்கள் என்று சொல்லிக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். இப்படியாக அடுத்து வரும் தங்கள் இரண்டாவது திருமணத்தை நியாயப்படுத்த முயலுகிறார் கள். நம்மால் மக்களை முட்டாளாக்க முடிந்தாலும், தேவனை ஏமாற்ற முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு பெண் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் தொடர்ந்து தனது கணவனோடு உடலுறவு கொள்ள மறுத்து, பிறகு தனது கணவன் தனக்கு உண்மையுள்ளவனாக இல்லை என்று சொல்லி வழக்குப் போடும் பெண்ணைக்குறித்து அவர் என்ன நினைப்பார்? அந்த விவாகரத்துக்கு அவளும் காரணமாக இருக்கிறாள் அல்லவா?





உபாகமம் 24ஆம் அதிகாரத்தில் நாம் வாசித்த இருமுறை தள்ளப்பட்ட பெண்ணைப் பொருத்தவரையில், அவளுடைய இரண்டு விவாகரத்துக்களும் நியாயமானவையா என்பதைக் குறித்து எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை. அவளுடைய முதல் கணவன் அவளிடம் ''இலச்சையான'' காரணத்தைக் கண்டான். இந்த ''இலச்சையான'' காரணம் விபசாரமாக இருக்குமானால், மோசேயின் நியாயப்பிரமாணத் தின்படி அவள் கொல்லப்படுவதற்கே தகுதியுடையவளாக இருக்கிறாள். விபசாரத்தில் ஈடுபடுபவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்றே சொல்லப்பட்டிருக்கிறது [பார்க்க, லேவி. 20:10]. எனவே, விபசாரம் மட்டுமே தள்ளுதலுக்கான நியாயமான காரியமாக இருக்கு மானால், அவளுடைய முதல் கணவன் அவளைத் தள்ளிவிடுவதற்கு நல்ல காரணம் எதுவும் இல்லை என்றாகிவிடுகிறது. இதற்கு மாறாக, அவள் விபசாரம் செய்திருந்தால், அவன் மரியாளின் கணவனாகிய யோசேப்பைப் போல நீதியுள்ளவனாக இருந்திருந்தால் ''இரகசியமாய் அவளைத் தள்ளிவிட'' யோசித்திருக்கலாம் [மத். 1:19]. மேலும் சாத்தியமான பல காரியங்களைக் கூறலாம்.

அவளுடைய இரண்டாவது கணவன் வெறுமனே ''அவளை வெறுத்ததாகச்'' சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியுமாக, யார்மீது குற்றம் சுமத்துவது அல்லது குற்றத்தை இருவருமே பகிர்ந்துகொள்ளு கிறார்களா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் இது எந்த வேறுபாட்டையும் உண்டாக்கவில்லை. தேவன் தமது கிருபையின்மூலம் இருமுறை தள்ளப்பட்ட அவளை அவளுடைய முதல் கணவன் தவிர வேறு எவரும் மணந்துகொள்ளலாம் என்று அனுமதியளித்திருக்கிறார்.

## ஒரு எதிர்ப்பு

''ஆனால் எந்தவொரு காரணத்துக்காகவும் அவர்கள் விவாகரத்துப் பெற்றிருந்தாலும், அவர்கள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் பட்டால், நியாயமில்லாத காரணங்களுக்காகவும் அவர்கள் தள்ளிவிடும் படி அவர்களை ஊக்குவிக்கும் அல்லவா?'' என்று கேட்கப்படுகிறது. ஒருவேளை தேவனை மெய்யாகவே பிரியப்படுத்த முயலாத வெறும் சமயப்பிரகாரமான மக்களைப் பொருத்தவரையில் இது உண்மையாக *இருக்கலாம்* என்று நான் நினைக்கிறேன். ஆனால் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்காதவர்களைப் பாவம் செய்யாதிருக்கும்படி செய்ய முயலுவது பயனில்லாத முயற்சியாகவே இருக்கும். ஆனால் மெய்யாகவே தங்கள் இருதயத்தில் தேவனுக்கு ஒப்புக்கொடுத்திருப்பவர் கள் பாவம் செய்வதற்கான வழிவகைகளைத் தேடுவதில்லை. அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தவே முயலுகிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் பொதுவாக வலுவான திருமண உறவுகளைக் கொண்டிருக்கிறார்கள். மேலும், தேவன் பழைய உடன்படிக்கையின்படி இஸ்ரவேல்

மக்களுக்குத் தாராளமான பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறபடியால், பழைய உடன்படிக்கையின் கீழான மக்கள் நியாயமில்லாத காரணங்களுக்காகத் தள்ளிவிடுவதைக் குறித்து இந்தப் பிரமாணத்தின் அடிப்படையில் தேவன் அதிகமாகக் கவலைப்படவில்லை.

மன்னிப்புக் கிடைக்கிறது என்பதற்காக மக்கள் அதிகமாகப் பாவம் செய்யக்கூடும் என்பதற்காக, நாம் மக்களிடம் தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கச் சித்தமாக இருக்கிறார் என்று சொல்லுவதைத் தவிர்க்க வேண்டுமா? அப்படியானால், நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதையே நிறுத்திவிட வேண்டியிருக்கும். மறுபடியுமாக, எல்லாமே மக்களின் இருயத்தைப் பொருத்ததாக ஆகிறது. தேவனிடம் அன்புகூருகிறவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய விரும்புகிறார்கள். நான் எந்தப் பாவத்தைச் செய்தாலும், நான் வேண்டிக்கொள்ளும்போது தேவன் அவைகளை மன்னிக்கச் சித்தமாயிருக்கிறார் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் அது பாவம் செய்யும்படி என்னைத் தூண்டாது. ஏனென்றால் நான் தேவனை நேசிக்கிறேன், நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன். நான் தேவனுடைய கிருபையினால் மாற்றப்பட்டிருக்கிறபடியால், அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறேன்.

மக்கள் திருமண உறவில் நீடித்திருக்கும்படி தூண்டுவதற்காக, ஏற்கெனவே விவாகரத்தின் தவிர்க்கமுடியாத பின்விளைவுகளோடு இன்னொரு எதிர்மறையான பின்விளைவையும் சேர்க்க தேவன் விரும்பவில்லை. திருமண உறவில் பிரச்சினையைக் கொண்டிருப்பவர்களிடம் அவர்கள் விவாகரத்துச் செய்துகொண்டால் மறுபடியும் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லுவது அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முடியாது, திருமண உறவிலேயே அவர்கள் நிலைத்திருக்கும்படி அவர்களைத் தூண்டவும் முடியாது. அப்படி நீங்கள் கூறுவதை அவர் நம்பினாலும், வாழ்நாள் முழுவதும் துன்பம் நிறைந்த மணவாழ்க்கையில் ஈடுபடுவதைவிடத் தனிமையில் இருப்பதே சிறப்பு என்று பாடுபடும் அந்த நபர் நினைப்பார்.

### மறுமணம் குறித்துப் பவுல்

இயேசுவின் வார்த்தைகளுக்கும், மோசேயின் வார்த்தைகளுக்கும் இடையே இசைவைக் காண்பதற்கு முன்பாக, பவுல் அப்போஸ்தலனும் மோசேயுடன் ஒத்துப் போகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். தள்ளப்பட்டவர்கள் மறுமணம் செய்வது பாவமல்ல என்று பவுல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பழைய ஏற்பாடு சொல்லுவதற்கு அவர் ஒத்துப் போகிறார்.

> அன்றியும் கன்னிகைகளைக் குறித்து, கர்த்தரால் எனக்குக் கட்டளை இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால்





> இரக்கம்பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன். அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாதிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன். நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகைதேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால், மனைவியைத் தேடாதே. *நீ விவாகம்பண்ணினாலும் பாவமல்ல*; கன்னிகை விவாகம்பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப்பட்டவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன் [1 கொரி. 7:25–28 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்தப் பகுதியில் பவுல் விவாகரத்துப் பெற்றவர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை. அந்த வேலையில் கிறிஸ்தவர்கள் சந்திக்க வேண்டியிருந்த துன்புறுத்தல்களின் காரணமாக திருமணமானவர்களும், திருமணமாகாதவர்களும், விவாகரத்துப் பெற்றவர்களும் அப்படியே இருந்துவிட்டால் நலமாயிருக்கும் என்று அவர் சொல்லுகிறார். என்றாலும், தள்ளப்பட்டவர்களும் கன்னிகைகளும் திருமணம் செய்துகொண்டால் அது பாவமல்ல என்றும் அவர் சொல்லுகிறார்.

தள்ளப்பட்டவர்கள் மறுமணம் செய்துகொள்ளுவதற்குரிய நியாயமான தகுதிகளைப் பற்றிப் பவுல் சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். தள்ளப்பட்ட நபர் முந்தைய விவாகரத்தின்மூலம் எந்தக் குற்றமும் புரிந்திராதவராக இருந்தால் மட்டுமே அவர் மறுமணம் செய்துகொள்ள முடியும் என்று அவர் சொல்லவில்லை. [தேவனைத் தவிர இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து நிதானிக்கும் தகுதி வேறு எவருக்கு இருக்கிறது?] தங்கள் இரட்சிப்புக்கு முன்னால் விவாகரத்துப் பெற்றவர்கள் மட்டுமே மறுமணம் செய்துகொள்ளலாம் என்றும் அவர் சொல்லவில்லை. இல்லை, தள்ளப்பட்டவர்கள் மறுமணம் செய்துகொள்ளுவது பாவமல்ல என்று மட்டுமே அவர் சொல்லுகிறார்.

### விவாகரத்தைக் குறித்துப் பவுல் மென்மையாக இருக்கிறாரா?

பவுல் மறுமணம் குறித்த கிருபையான கொள்கையை ஆதரிக்கிறபடியால், அவர் விவாகரத்தைக்குறித்துக் கண்டிப்பில்லாமல் இருக்கிறார் என்று அர்த்தமாகுமா? அவர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில் இதற்கு முன்பு, விவாகரத்து குறித்த தேவனுடைய வெறுப்புக்கு இணையான வகையில் விவாகரத்தைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்:

> விவாகம்பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள்

தன் புருஷனைவிட்டுப் பிரிந்துபோகக் கூடாது. பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது. மற்றவர்களைக் குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது: சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியா யிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக் கக்கடவள். என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன. ஆகிலும், அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்துபோகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரி யாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக் கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்த தெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம்பண்ணு கிறேன் (1 கொரி. 7:10–17).

பவுல் முதலில் விசுவாசிகளை மணந்துகொள்ளாத விசுவாசிகளோடு பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் விவாகரத்து செய்துகொள்ளக் கூடாது. இது தன்னுடைய போதனையல்ல, கர்த்தருடைய போதனை என்று பவுல் சொல்லுகிறார். இதுவரை வேதாகமத்தில் நாம் பார்த்த எல்லாவற்றோடும் இது ஒத்துப் போகிறது.

இங்கேதான் காரியம் சுவாரசியமாகிறது. அபூர்வமான சந்தர்ப்பங் களில் விசுவாசிகளும்கூட விவாகரத்து செய்ய வேண்டியிருக்கும் என்பதைப் பவுல் உணர்கிறார். அப்படிப்பட்ட நிலை வரும்போது,





விவாகரத்துச் செய்தவர் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்றும், அவர் தனது வாழ்க்கைத் துணையோடு ஒப்புரவாக வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறுகிறார். (பவுல் மனைவிமார்களுக்கு இந்தத் திட்டவட்டமான ஆலோசனைகளைக் கொடுத்தாலும், அவை கணவன் மார்களுக்கும் பொருத்தமானவை என்று நான் நினைக்கிறேன்).

மறுபடியுமாக, பவுல் எழுதுவது நமக்கு வியப்பையளிக்கவில்லை. முதலில் அவர் விவாகரத்தைக் குறித்த தேவனுடைய பிரமாணத்தை எடுத்துச் சொல்லுகிறார். ஆனால் தேவனுடைய பிரமாணத்துக்கு எப்போதும் கீழ்ப்படிவார்கள் என்று சொல்லமுடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவே, இரண்டு விசுவாசிகளிடையே விவாகரத்து என்னும் பாவம் உண்டாகும்போது, அவர் மேலும் சில போதனைகளைக் கொடுக்கிறார். தனது மனைவியை அல்லது கணவனை விவாகரத்துச் செய்த நபர் மறுமணம் செய்துகொள்ளாமல் இருக்க வேண்டும் அல்லது அந்த நபர் தனது வாழ்க்கைத் துணையோடு மறுபடியுமாக ஒப்புரவாக வேண்டும். விசுவாசிகளுக்கிடையே விவாகரத்தைப் பொருத்தவரையில் இதுவே சிறப்பான காரியமாகும். அவர்கள் இருவரும் மறுமணம் செய்து கொள்ளாமல் இருக்கும் வரையில், ஒப்புரவாகுதலுக்கான வாய்ப்பு இருக்கிறது. இதுவே சிறப்பான காரியமாகும். ஆனால் இருவரில் ஒருவர் மறுமணம் செய்துகொண்டால், ஒப்புரவாகுதலுக்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. (அவர்கள் விவாகரத்தின்மூலம் மன்னிக்க முடியாத ஒரு பாவத்தைச் செய்திருப்பார்களானால், அவர்கள் மறுமணம் செய்துகொள்ள வேண்டாம், ஒப்புரவாக வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்ல வேண்டிய காரணமே இருக்காது என்பது தெளிவாகும்).

விவாகரத்துப் பெற்ற விசுவாசிகள் எப்போதுமே தமது இரண்டாவது ஆலோசனைக்குக் கீழ்ப்படிவது அபூர்வம் என்பதை அறியாத அளவுக்குப் பவுல் புத்திசாலித்தனம் இல்லாதவராக இருக்கிறாரா? இல்லை. அவர் விவாகரத்துப் பெற்ற விசுவாசிகளுக்குக் கூடுதலான ஆலோசனை களைக் கொடுக்காமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் விவாகரத்துச் செய்ய வேண்டாம் என்ற தனது முதல் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று அவர் எதிர்பார்த்ததுதான் காரணமாகும். எனவே மிகவும் அபூர்வமான சிலருக்கு மட்டுமே அவருடைய இரண்டாவது ஆலோசனை தேவையாக இருக்கும். கிறிஸ்துவை மெய்யாகப் பின்பற்றுகிறவர்களின் மத்தியில் திருமண உறவுப் பிரச்சினைகள் இருக்குமானால், அவைகளைத் தீர்த்துக்கொள்ளவே அவர்கள் முயலு வார்கள். மேலும் ஒரு விசுவாசி தனது திருமண உறவைக் காத்துக் கொள்ள எல்லா வகையிலும் முயன்றும் தவிர்க்க முடியாத வகையில் விவாகரத்துக்கு ஆளானாலும், தனிப்பட்ட அவமான உணர்வு காரணமாகவோ அல்லது கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்காகவோ

மறுமணம் செய்துகொள்ளாதிருப்பதையே தெரிந்துகொண்டு, முதல் உறவு ஒப்புரவாகுதலுக்காகக் காத்திருப்பார். இன்று சபையில் விவாகரத்து பெரிய பிரச்சினையாக இருப்பதற்குக் காரணம் அதிக சதவீதத்திலான பொய்யான விசுவாசிகள் இருப்பதே என்று நான் நம்புகிறேன். இவர்கள் மெய்யாகவே விசுவாசிக்கவில்லை, ஆண்டவராகிய இயேசுவுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை.

1 கொரிந்தியர் 7ஆம் அதிகாரத்தில் பவுல் எழுதியிருப்பதிலிருந்து தேவன் அவிசுவாசிகளிடம் எதிர்பார்ப்பதைவிடப் பரிசுத்த ஆவியானவரைத் தங்களுக்குள் கொண்ட விசுவாசிகளிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார் என்று தெரிகிறது. அவிசுவாசிகளாக இருக்கும் கணவனோ அல்லது மனைவியோ தங்களோடு வசிக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கும் வகையில் விசுவாசியாக இருக்கும் கணவனோ அல்லது மனைவியோ அவர்களை விவாகரத்துச் செய்யக் கூடாது என்று பவுல் எழுதியிருக்கிறார். இதைக் குறித்து வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள எல்லாவற்றுக்கும் இது பொருத்தமாக இருக்கிறபடியால் இது நமக்கு வியப்பை அளிக்கக்கூடாது. தேவன் விவாகரத்துக்கு விரோதமாக இருக்கிறார். பவுல் தொடர்ந்து அவிசுவாசியான கணவனோ அல்லது மனைவியோ விவாகரத்தை விரும்பினால் அதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். அவிசுவாசி தேவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லை என்பதையும், அதனால் அவர்கள் விசுவாசியைப்போலச் செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் பவுல் அறிந்திருந்தார். ஒரு அவிசுவாசி ஒரு விசுவாசியோடு வாழச் சம்மதிக்கும்போது, ஒன்று அந்த அவிசுவாசி சுவிசேஷத்துக்குத் தன்னைத் திறந்துகொடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும் அல்லது விசுவாசி பின்வாங்கிப்போனவராகவோ அல்லது பொய்யான கிறிஸ்தவராகவோ இருக்க வேண்டும்.

இப்போது அவிசுவாசியினால் விவாகரத்து செய்யப்பட்ட விசுவாசி மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்று யாரால் சொல்ல முடியும்? பவுல் ஒருபோதும் அப்படிப்பட்ட காரியத்தைச் சொல்லவில்லை. *ஆனால் விவாகரத்துப் பெற்ற இருவரும் விசுவாசிகளாக இருந்தால் அவர்களைக் குறித்து அவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்.* ஒரு அவிசுவாசியினால் விவாகரத்துப் பெற்ற ஒரு விசுவாசி மறுமணம் செய்துகொள்ளுவதைத் தேவன் ஏன் எதிர்ப்பார்? இதனால் எந்த நோக்கம் நிறைவேற்றப்படும்? என்றாலும், இப்படி அனுமதிப்பது இயேசுவானவர் மறுமணத்தைக் குறித்துக் கூறியிருப்பதற்கு நேரடியாக விரோதமானதாக இருக்கும்: ‘‘தள்ளிவிடப் பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்’’ (மத். 5:32). இயேசுவானவர் கூறியதை நாம்தான் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதை இது மறுபடியுமாக எனக்கு நினைவுபடுத்துகிறது.





## பிரச்சினை

விவாகரத்து என்பது குறைந்தபட்சம் அதில் ஈடுபட்டுள்ள ஒருவரின் பாவத்தைக் குறிக்கிறது என்று இயேசு, மோசே, பவுல் மூவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மூவரும் பொதுவாக விவாகரத்துக்கு விரோதமாக இருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒரு பிரச்சினை இருக்கிறது: மறுமணத்தைக்குறித்து மோசேயும் பவுலும் கூறியதை நாம் எப்படி இயேசுவானவர் மறுமணத்தைக்குறித்துக் கூறியதோடு ஒப்புரவாக்க முடியும்? எல்லோருமே தேவனால் ஏவப்பட்டுச் சொல்லியிருக்கிறபடியால் அவர்கள் சொல்லியவை ஒன்றுக்கொன்று இசைவாக இருக்க வேண்டும்.

இயேசுவானவர் உண்மையில் என்ன சொன்னார், யாரிடம் அதைச் சொன்னார் என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம். மத்தேயுவின் சுவிசேஷத்தில் இயேசு இரண்டு முறை விவாகரத்தையும் மறுமணத்தையும் குறித்துப் பேசியிருப்பதை நாம் காண்கிறோம். முதலில் மலைப் பிரசங்கத்திலும் பிறகு சில பரிசேயர்களுக்குப் பதிலளிக்கும் விதமாகவும் அவர் சொல்லியிருக்கிறார். இந்தப் பரிசேயரோடு இயேசுவின் உரையாடலை நாம் முதலில் பார்ப்போம்:

> அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத்

> தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளி விடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத். 19:3–9).

இயேசுவானவரோடுள்ள இந்த உரையாடலில், ஏற்கெனவே நான் குறிப்பிட்ட உபாகமம் 24:1–4 வசனங்களிலுள்ள மோசேயின் நியாயப் பிரமாணத்தின் பகுதியைப் பரிசேயரும் குறிப்பிட்டார்கள். அங்கே இப்படி எழுதப்பட்டிருக்கிறது: ‘‘ஒருவன் ஒரு ஸ்தீரியை விவாகம்பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் *இலச்சையான காரியத்தைக்* கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம்’’ (உபா. 24:1).

இயேசுவானவரின் நாட்களில் எது ‘‘இலச்சையான காரியம்’’ என்பதைக் குறித்து இரண்டு வெவ்வேறான சிந்தனைகள் இருந்தன. அதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பாக ஹில்லல் என்ற ரபீ இலச்சை என்பது ஒப்புரவாக்க முடியாத வேறுபாடு என்று போதித்தார். இயேசுவானவர் பரிசேயரோடு விவாதித்த காலத்துக்கு முன்பாக ‘‘ஹில்லலின்’’ அர்த்தம் இன்னும் தாராளமயமாகி, அது ‘‘எந்தக் காரணத்துக்காகவும்’’ விவாகரத்தை அனுமதித்தது. இயேசுவிடம் பரிசேயர் கேட்ட கேள்வி இதைச் சுட்டிக்காட்டுகிறது. ஒருவன் தன் மனைவி தன் உணவைக் கரித்துவிட்டாலோ, அதிகமாக உப்பைப் போட்டுவிட்டாலோ, அவளுடைய முழங்கால் தெரியுமளவுக்கு வெளியிடத்தில் சுற்றினாலோ, மற்றொரு ஆணுடன் பேசினாலோ, தனது மாமியாரிடம் தயவில்லாமல் பேசினாலோ அல்லது பிள்ளை யில்லாமல் இருந்தாலோ அவளை விவாகரத்துச் செய்யலாம் என்றாகி விட்டிருந்தது. தன் மனைவியைவிடக் கவர்ச்சிகரமான ஒரு பெண்ணைப் பார்க்கும்போது, மனைவி ‘‘இலச்சையானவளாகத்’’ தோன்றினாலும் அவளை ஒருவன் விவாகரத்துச் செய்துவிடலாம்.

ஹில்லலுக்கு முன்னால் வாழ்ந்த ஷம்மாய் என்ற மற்றொரு ரபீ ‘‘இலச்சையான காரியம்’’ என்றால் விபசாரம் போன்ற மிகவும் ஒழுக்கக் கேடான காரியம் என்று போதித்திருந்தார். நீங்கள் எதிர்பார்க்கிறபடி இயேசுவானவரின் நாட்களில் இருந்த பரிசேயர்களின் மத்தியில் ஹில்லலின் அர்த்தமே அதிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எந்தக் காரணத்துக்காகவும் தள்ளிவிடலாம் என்று போதித்து, பரிசேயர்கள் அப்படியே நடந்தும் வந்தார்கள். எனவே தள்ளிவிடுதல் அதிகமாக இருந்தது. பரிசேயர்கள் தங்கள் மாய்மாலமான வழியின்படி, மோசேயின் பிரமாணத்தை மீறாமல் இருக்கும்படியாக, தள்ளிவிடப்பட்டவளுக்கு தள்ளுதல் சீட்டைக் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது.





## இயேசுவானவர் பரிசேயரிடம் பேசுகிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்

இந்தப் பின்னணியை நாம் கருத்தில் கொள்ளுவோமானால், இயேசு எதற்கு எதிராகக் குரல் கொடுத்தார் என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். அவருக்கு முன்பாக மாய்மாலமான சமயப் போதகர்களின் குழுவினர் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் ஒன்றுக்கும் அதிகமான தடவை தங்கள் மனைவிமாரைத் தள்ளி வைத்திருக்க வேண்டும். பெரும்பாலும் அதிகக் கவர்ச்சிகரமான பெண்களைப் பார்த்திருப்பதே இப்படிப்பட்ட தள்ளிவைத்தலுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். (இயேசுவானவர் தள்ளி விடுதலைக் குறித்து மலைப்பிரசங்கத்தில் பேசிய வார்த்தைகள் இச்சையைக்குறித்து அவர் கூறிய வார்த்தைகளைத் தொடர்ந்து வந்திருப்பது தற்செயலான ஒன்றல்ல என்றே நான் நினைக்கிறேன். அவர் அதை விபசாரத்தின் ஒரு வடிவமாகவே குறிப்பிட்டார்). என்றாலும் தாங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைத் தாங்கள் கைக்கொள்ளு வதாகக் கூறி, தங்களை நியாயப்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய கேள்வியே அவர்கள் பாரபட்சம் கொண்டவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. எந்தக் காரணத்துக்காகவும் ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிடலாம் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். ஆதியாகமம் இரண்டாம் அதிகாரத்தில் திருமண உறவுகுறித்த தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக்கூறி, திருமணம் குறித்த தேவனுடைய நோக்கத்தை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக் கிறார்கள் என்பதை இயேசுவானவர் வெளியரங்கமாக்கினார். விவாகரத்தே இருக்கக்*கூடாது* என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கும்போது, அவர் ‘‘எந்த முகாந்தரத்தினாலாகிலும்’’ தள்ளி வைப்பதை அனுமதிப்பாரா? ஆனால் இளம் வாலிபர்கள் தங்கள் தோழிகளை விட்டுவிடுவதுபோல, இஸ்ரவேலரின் தலைவர்கள் தங்கள் மனைவிகளைத் தள்ளிவைத்துக்கொண்டிருந்தார்கள்!

இயேசுவானவர் விவாகரத்தைக் குறித்த தமது கருத்தைப் பொது இடத்தில் சொல்லியிருந்தபடியால் பரிசேயர் நிச்சயமாக அதை அறிந்திருப்பார்கள். எனவே அவர்கள் தங்கள் எதிர்வாதத்துக்கு ஆயத்தமாக இருந்தார்கள். ‘‘அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளை யிட்டார்’’ என்று அவர்கள் கேட்டார்கள் (மத். 19:7).

இந்தக் கேள்வியே அவர்களுடைய பட்சபாதத்தை வெளிப்படுத்து கிறது. தங்கள் மனைவியிடம் ‘‘இலச்சையான’’ ஒரு காரியத்தைக் காணும்போது, அளவுக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து அவளை அனுப்பிவிட வேண்டும் என்று மோசே எல்லோருக்கும் கட்டளை யிட்டிருப்பது போன்ற தொனியில் அவர்கள் இந்தக் கேள்வியைக்

கேட்டார்கள். ஆனால் உபாகமம் 24:1–4 வசனத்தை நாம் வாசிக்கும் போது, மோசே சொல்லுவது அதுவல்ல என்பதை நாம் அறிகிறோம். அவர் ஒரு பெண்ணின் மூன்றாவது திருமணத்தையே ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார், அவள் தனது முதல் கணவனை மறுபடியுமாக மணந்துகொள்ளுவதைத் தடுத்தார்.

மோசே தள்ளிவிடுதலைக் குறிப்பிடுகிறபடியால், ஏதேனும் ஒரு காரணத்துக்காகத் தள்ளிவிடுதல் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். பரிசேயர்கள் *கட்டளையிட்டார்* என்று சொல்லுவதற்குப் பதிலாக இயேசுவானவர் *இடம் கொடுத்தார்* என்று சொல்லுவதைக் கவனியுங் கள். மோசே விவாகரத்தைக் குறித்துக் *கட்டளையிடவில்லை*, அவர் அதற்கு *இடங்கொடுத்தார்*. இஸ்ரவேலரின் இருதயக் கடினத்தின் நிமித்தமாகவே மோசே இப்படி இடங்கொடுத்தார். அதாவது மக்களின் பாவகரமான நிலைக்கு ஒரு இரக்கத்தோடு கூடிய சலுகையாக தேவன் விவாகரத்துக்கு இடங்கொடுத்தார். மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கு உண்மையில்லாமல் நடந்துகொள்ளுவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். ஒழுக்கச் சீர்கேடுகள் நடக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். மக்களின் இருதயங்கள் நொறுக்கப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே அவர் விவாகரத்துக்கு இடம்கொடுத்தார். இது அவர் ஆதியில் நோக்கம் கொண்ட காரியமல்ல, ஆனால் பாவம் அதைத் தேவையான ஒன்றாக்கியது.

அடுத்தபடியாக, இயேசுவானவர் தேவனுடைய பிரமாணத்தைப் பரிசேயருக்கு எடுத்துச் சொல்லுகிறார். மோசே குறிப்பிடும் ''இலச்சை யான காரியத்துக்கு'' விளக்கம் கொடுக்கும் அவர் ''ஆதலால், எவனாகிலும் தன் மனைவி *வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி*, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்'' [மத். 19:9 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது]. தேவனுடைய பார்வையில் வேசித்தனம் அதாவது *ஒழுக்கச் சீர்கேடு* மட்டுமே ஒருவன் தன் மனைவியை விவாகரத்துச் செய்வதற்கான காரணமாக இருக்கிறது. இதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. தனது மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ அதிகமான எதிர்ப்பைத் தெரிவிக்கும் அளவுக்கு ஒரு கணவனோ அல்லது மனைவியோ செய்யக் கூடிய காரியம் எது? ஒருவனோ அல்லது ஒருத்தியோ வேசித்தனம் செய்யும்போது, அவனோ அல்லது அவளோ மிருகத்தனமான செய்தியை அனுப்புகிறார்கள். ''வேசித்தனம்'' என்று இயேசுவானவர் குறிப்பிடும் போது, அவர் மற்றொருவனுடைய மனைவியை ஆசையோடு முத்தமிட்டுத் தழுவுவது, ஆபாச இலக்கியங்களையோ அல்லது படங்களையோ பார்ப்பது, மற்றப் பாலுறவு வக்கிரங்கள் இவைகளையும் சேர்த்து அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். இயேசுவானவர் தமது மலைப்





பிரசங்கத்தின்போது இச்சையை விபச்சாரத்துக்கு இணையாகக் கூறினார் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இயேசுவானவர் பரிசேயரோடு இவைகளைப் பேசிக்கொண்டிருந் தார் என்பதை நாம் மறவாதிருப்போம். அவர்கள் எந்தவொரு காரணத்துக் காகவும் தங்கள் மனைவியைத் தள்ளிவிட்டு, மிகவும் விரைவாக மறு மணம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஏழாவது கட்டளையை மீறக்கூடாது என்பதற்காக ஒருபோதும் விபசாரம் செய்ய மாட்டார்கள். அவர்கள் தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார் கள் என்று இயேசுவானவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். அவர்கள் செய்துகொண்டிருப்பதற்கும் விபசாரத்துக்கும் அதிக வேறுபாடு இல்லை. இதுதான் சரியான அர்த்தமாக இருக்கிறது. மற்றொரு பெண்ணை விவாகம் செய்ய வேண்டும் என்பதற்காகத் தனது மனைவி யைத் தள்ளிவிடும் எவனும் ஒரு விபச்சாரக்காரன் செய்வதையே செய்கிறான். ஆனால் சட்டபூர்வமான பாதுகாப்போடு இதைச் செய்கிறான்.

## தீர்வு

இதுவே இயேசுவின் வார்த்தைகளைப் பவுல் மற்றும் மோசேயின் வார்த்தைகளோடு இசைவாக்குவதற்கான திறவுகோலாக இருக்கிறது. இயேசுவானவர் பரிசேயர்களின் மாய்மாலத்தையே வெளியரங்கமாக்கிக் கொண்டிருந்தார். அவர் மறுமணத்தைத் தடைசெய்யும் ஒரு பிரமாணத்தை உண்டாக்கவில்லை. அப்படி அவர் செய்தால் அது மோசேக்கும் பவுலுக்கும் முரண்பாடாக இருக்கும். விவாகரத்துப் பெற்ற இலட்சக்கணக்கான மக்களுக்கும், மறுமணம் செய்துகொண்ட இலட்சக்கணக்கான மக்களுக்கும் அது குழப்பமாக இருந்திருக்கும். மறுமணம் குறித்த ஒரு பிரமாணத்தை அல்லது விதியை இயேசுவானவர் உருவாக்கினார் என்றால், இயேசுவின் பிரமாணத்தைக் குறித்துக் கேள்விப்படுவதற்கு முன்னர் விவாகரத்துச் செய்தவர்களையும், மறுமணம் செய்துகொண்டவர்களையும் குறித்து என்ன? அவர்கள் விபச்சார உறவுகளில் வாழுகிறார்கள் என்று நாம் கூற முடியுமா? வேதாகமம் விபச்சாரக்காரர்கள் எவரும் பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள முடியாது என்று சொல்லுவதை அறிந்திருக்கிற படியால் [பார்க்க, 1 கொரி. 6:9–10] நாம் அவர்களை விவாகரத்துச் செய்துகொள்ளும்படி சொல்லலாமா? *ஆனால் தேவன் விவாகத்தை வெறுக்கிறார் அல்லவா?*

அவர்களுடைய முந்தைய வாழ்க்கைத் துணை மரிக்கும் வரையில் அவர்களோடு உறவுகொள்ளப்போவதில்லை என்று சொல்லி, தொடர்ந்து விபசாரம் செய்வதைத் தவிர்க்க வேண்டுமா? *ஆனால் திருமணமான தம்பதியர் ஒருவருக்கொருவர் உறவு கொள்ளுவதை*

*நிறுத்தக் கூடாது என்று பவுல் சொல்லியிருக்கவில்லையா?* இப்படிப் பரிந்துரை செய்வது பாலுறவுரீதியான சோதனைகளுக்கு இடம் கொடுக்கிறது அல்லவா, எப்போது நமது முந்தைய வாழ்க்கைத் துணை மரிப்பான் என்று எண்ணும்படி செய்கிறது அல்லவா?

சிலர் சொல்லுகிறபடி, அவர்கள் தங்கள் தற்போதைய கணவனையோ அல்லது மனைவியையோ விவாகரத்து செய்துவிட்டு தங்கள் முதல் கணவனையோ அல்லது மனைவியையோ மறுதிருமணம் செய்துகொள்ளும்படி சொல்லலாமா? ஆனால் இது உபாகமம் 24:1–4 வசனங்களின்படி மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறுவதாக இருக்கிறது அல்லவா?

மறுமணம் செய்துகொள்ளாத விவாகரத்து பெற்ற மக்களைக் குறித்து என்ன? தங்கள் முந்தைய வாழ்க்கைத் துணை விபசாரம் செய்தால் மட்டுமே இவர்கள் மறுமணம் செய்துகொள்ளலாம் என்று சொல்லப்படுமானால், அவர்கள் இப்படி விபசாரம் செய்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டறிவது யார்? மறுமணம் செய்துகொள்ள வேண்டுமானால், தங்கள் முன்னாள் வாழ்க்கைத் துணையே இச்சை குறித்த குற்றவாளி என்பதைச் சிலர் நிரூபிக்க வேண்டியிருக்குமா? மற்றவர்கள் தங்கள் முந்தைய வாழ்க்கைத் துணையின் தவறான உறவுகளுக்குச் சாட்சிகளைக் கொண்டுவர வேண்டியிருக்குமா?

நான் ஏற்கெனவே கேட்டபடி, பாலுறவில் ஈடுபடாத ஒருவரைத் திருமணம் செய்துகொண்டதின் காரணமாக முன்னாள் வாழ்க்கைத் துணை விபசாரம் செய்திருந்தால் அதைக் குறித்து என்ன? விபசாரம் செய்தவர் மறுபடியும் திருமணம் செய்துகொள்ளுவது தடை செய்யப்பட்டிருக்கும் அதே வேளையில், பாலுறவில் ஈடுபட மறுத்தவர் மறுமணம் செய்துகொள்ளலாமா?

திருமணத்துக்கு முன்பாகத் தவறான உறவில் ஈடுபட்டவர்களைக் குறித்து என்ன? அந்த ஆணுடைய அல்லது பெண்ணுடைய இந்தத் தவறான உறவு, அவர்களுடைய வருங்கால மனைவி அல்லது கணவனுக்கு எதிராகச் செய்யப்படும் துரோகமான செயல் அல்லவா? அப்படி இவர்கள் தவறான உறவில் ஈடுபட்டவர்கள் ஏற்கெனவே திருமணம் செய்துகொண்டவர்களாக இருப்பார்களானால், இது விபசாரத்துக்குச் சமமாக ஆகிறது அல்லவா? அப்படியானால் எப்படி அந்த நபர் திருமணம் செய்துகொள்ளும்படி அனுமதிக்கப்பட முடியும்?

திருமணமாகாமல் இருவர் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்துவிட்டு, பிறகு ''பிரிந்துபோனால்'' அதைக் குறித்து என்ன? அவர்கள் இப்படிப் பிரிந்துபோனபிறகு, அவர்கள் சட்டப்படி திருமணம் செய்துகொள்ள வில்லை என்பதற்காக மட்டும் எப்படி மற்றொருவரைத் திருமணம் செய்து கொள்ளுவது அனுமதிக்கப்படலாம்? விவாகரத்துச் செய்து





கொண்டு மறுமணம் செய்துகொள்ளுபவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே என்ன வேறுபாடு இருக்கிறது?

ஒருவர் கிறிஸ்தவனாகும்போது ''பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' என்ற உண்மையைக் குறித்து என்ன? [பார்க்க, 2 கொரி. 5:17]. இது சட்டரீதியல்லாத விவாகரத்தைத் *தவிர* மற்ற எல்லாப் பாவங்களையும் மட்டும் குறிக்கிறதா?

இயேசுவானவர் மறுமணத்தைக் குறித்து ஒரு புதிய பிரமாணத்தை உருவாக்கவில்லை என்பதைக் காட்டும்படி இப்படிப்பட்ட கேள்வி களையும் இன்னும் பல கேள்விகளையும் [51] கேட்க முடியும். அவர் மறுமணம் குறித்த புதிய பிரமாணத்தைக் கொடுத்தால் அதன் பின்விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை அறியுமளவுக்கு அவர் புத்திசாலித்தனம் கொண்டிருந்தார் என்பது நிச்சயமாகும். இது மட்டுமே அவர் பரிசேயரின் மாய்மாலத்தை வெளியரங்கமாக்குவதையே நோக்க மாகக் கொண்டிருந்தார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அவர்கள் ''எந்த முகாந்தரத்தினாலாகிலும்'' தங்கள் மனைவியைத் தள்ளிவிட்டு, மறுமணம் செய்துகொண்ட மாய்மாலக்காரர்களாக இருந்தார்கள்.

அவர்கள் செய்வது தவறு என்று வெறுமனே சொல்லாமல் அவர்கள் ''விபசாரம் செய்வதாக'' இயேசுவானவர் சொல்லியதற்குக் காரணம், எந்தவொரு காரணத்துக்காகவும் விவாகரத்து செய்து, தொடர்ந்து மறுமணம் செய்துகொள்ளுவது விபசாரம் செய்வதற்குச் சமமானது என்பதை அவர்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான். ஏனென்றால் இவ்வளவையும் செய்தபிறகு தாங்கள் விபசாரம் செய்ய வில்லை என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இயேசுவானவர் மறுமணத்தின் பாலுறவு குறித்து மட்டுமே அக்கறை கொண்டிருந்தார் என்றும், பாலுறவிலிருந்து விலகி இருந்தால் மறுமணம் செய்துகொள்ளலாம் என்றும் சொல்லுகிறார் என்று நாம் முடிவுக்கு வரலாமா? நிச்சயமாக முடியாது. எனவே அவர் சொல்லாத ஒன்றை அவர் சொல்லுவதாக நாம் கூறாதிருப்போமாக!

## ஒரு சிந்தனையோடு கூடிய ஒப்பீடு

இருவர் இருக்கிறார்கள் என்று நாம் வைத்துக்கொள்ளுவோம். அவர்களில் ஒருவர் திருமணமானவர். அவர் சமயவாதியாக இருக்கிறார்.

[51] எடுத்துக்காட்டாக, விவாகரத்துப் பெற்றிருந்த ஒரு போதகர் மறுமணம் செய்துகொண்டபோது, அவர் கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து விலக்கப்பட்டார். ''நான் என் மனைவியை விவாகரத்துச் செய்ததைவிட அவளைக் கொன்றிருந்தால் நலமாக இருந்திருக்கும். நான் அவளைக் கொலை செய்திருந்தால், அதைக் குறித்து மனந்திரும்பி, மன்னிப்பைப் பெற்று, சட்டபூர்வாக மறுமணம் செய்துகொண்டு, எனது ஊழியத்தைத் தொடர்ந்திருக்க முடியும்'' என்று அவர் இதைக்குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்!

தேவனிடம் தனது முழு இருதயத்தோடும் அன்புகூருவதாக அவர் சொல்லிக்கொள்ளுகிறார். ஆனால் அடுத்த வீட்டிலுள்ள இளம் பெண்ணின்மீது இச்சைகொள்ளத் துவங்குகிறார். சீக்கிரமாகவே அவர் தனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு, உடன்தானே தனது கனவுப் பெண்ணை மணந்துகொள்ளுகிறார்.

அடுத்த மனிதன் சமயவாதி அல்ல. அவர் ஒருபோதும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டதில்லை. அவர் பாவகரமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். இதன் காரணமாக அவர் திருமண உறவை இழந்து போகிறார். சில ஆண்டுகள் கழித்து, தனித்திருந்த அவர், சுவிசேஷத்தைக் கேட்டு, மனந்திரும்பி, தனது முழு இருயத்தோடும் இயேசுவைப் பின்பற்றத் துவங்குகிறார். மூன்றாண்டுகள் கழித்து அவர் சபையில் தான் கண்ட அதிக ஒப்படைப்புள்ள பெண்மணியை நேசிக்கத் துவங்குகிறார். இருவரும் ஆண்டவரையும், மற்றவர்களுடைய ஆலோசனையையும் நாடிய பிறகு, திருமணம் செய்துகொள்ளும்படி தீர்மானிக்கிறார்கள். அவர்கள் திருமணம் செய்துகொள்ளுகிறார்கள். மரணம் வரையிலும் ஒருவர் மற்றவருக்கும் தேவனுக்கும் உண்மையாக ஊழியம்செய்துவருகிறார்கள்.

இப்போது, இருவருமே மறுமணம் செய்ததில் பாவம் செய்துவிட்டார்கள் என்று *யூகித்துக்* கொள்ளுவோம். இருவரில் அதிகமான பாவத்தைச் செய்தது யார்? முதலாவது நபர்தான். அவர் தெளிவாக ஒரு விபச்சாரக்காரர் போலவே நடந்துகொண்டிருக்கிறார்.

ஆனால் இரண்டாவது மனிதனைக் குறித்து என்ன? அவர் பாவம் செய்துவிட்டார் என்று மெய்யாகவே தோன்றுகிறதா? முதலாவது நபரை விபச்சாரக்காரர் என்று சொல்லும்போது, இவர் அவரைவிட அதிக *வித்தியாசமானவர் இல்லை* என்று சொல்ல முடியுமா? நான் அப்படி நினைக்கவில்லை. இயேசுவானவர் விவாகரத்துச் செய்து, மறுமணம் செய்துகொள்ளுபவர்களைக் குறித்துச் சொன்னதை அவரிடம் சொல்லி, தேவன் இணைக்காத ஒரு பெண்ணோடு அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்றும், தேவன் இப்போதும் அவர் தனது முதல் மனைவியுடன் மணம் செய்துகொண்டிருப்பதாகவே கருதுகிறார் என்றும் சொல்லலாமா? அவர் விபசாரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்று சொல்லலாமா?

இதற்கான பதில் தெளிவாக இருக்கிறது. திருமணமானவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தவிர மற்றவர்களின்மீது பார்வையை வைக்கும்போதுதான் விபசாரம் நடக்கிறது. எனவே இன்னுமதிகக் கவர்ச்சியான ஒரு பெண்ணை மணந்துகொள்ளும்படியாக விவாகரத்துச் செய்வதும் விபசாரத்தைப்போலவே இருக்கிறது. ஆனால் திருமணமாகாத ஒருவர் தான் துரோகம் செய்வதற்கு மனைவி இல்லாதபடியால் அவர் விபசாரக் குற்றம் செய்ய முடியாது. அதேபோல் விவாகரத்துப்





பெற்ற ஒருவருக்கும் துரோகம் செய்ய மனைவி இல்லாத படியால், அவரும் விபசாரக் குற்றம் செய்ய முடியாது. இயேசுவானவர் கூறியிருப்பதின் வரலாற்று மற்றும் வேதாகமப் பின்னணியை நாம் புரிந்துகொள்ளும்போது, அர்த்தமில்லாததும், வேதாகமத்தின் எஞ்சிய பகுதிகளுக்கு முரண்பாடானதுமான முடிவுகளுக்கு வர மாட்டோம்.

பரிசேயரின் கேள்விக்கு இயேசுவானவர் பதிலளிப்பதைக் கேட்டவுடன் அவருடைய சீஷர்கள் ''மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம்பண்ணுகிறது நல்லதல்ல'' என்று கூறினார்கள் (மத். 19:10). அவர்கள் பரிசேயர்களின் போதனைகளுக்குக் கீழாக வளர்ந்தவர்கள் என்பதையும், பரிசேயரினால் அதிகமான தாக்கம் விளைவிக்கப்பட்டிருக்கும் ஒரு கலாச்சாரத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள். திருமண உறவு நிரந்தரமானது என்று அவர்கள் ஒருபோதும் கருதியதில்லை. உண்மையில், சில நிமிடங்கள் முன்புவரையிலும் எந்தக் காரணத்துக்காகவும் மனைவியைத் தள்ளிவிட முடியும் என்றே அவர்கள் நம்பிக் கொண்டிருந்திருக்கலாம். எனவே விவாகரத்துக்கும் விபசாரத்துக்கும் வாய்ப்புக்கொடுக்காமல், திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதே நல்லது என்று அவசரமாக முடிவுக்கு வருகிறார்கள்.

இயேசுவானவர் இப்படிப் பதிலளித்தார்:

> அதற்கு அவர்: வரம்பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு; மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு; பரலோகராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ளக்கடவன் என்றார் (மத். 19:11–12).

அதாவது, ஒருவர் தனது பாலுணர்வுகளைக் கட்டுப்படுத்துவதே முக்கியமான காரியமாகும். பவுலும்கூட ''வேகிறதைப் பார்க்கிலும் விவாகம்பண்ணுகிறது நலம்'' என்று சொல்லியிருக்கிறார் (1 கொரி. 7:9). அண்ணகர்களாகப் பிறந்தவர்களாகவோ அல்லது அந்தப்புரத்தைக் காக்கும்படி அண்ணகர்களாக ஆக்கப்பட்டவர்களோ பாலுணர்வைப் பெற்றிருப்பதில்லை. ''பரலோகராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்கள்'' கூடுதலான இச்சையடக்கத்துக்காகத் தேவனிடமிருந்து சிறப்பான வரம்பெற்றவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் இயேசுவானவர் ''வரம்பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்'' என்று கூறினார் (மத். 19:11).

## மலைப் பிரசங்கம்

மலைப்பிரசங்கத்தின்போது இயேசுவானவரின் பேச்சைக் கேட்டவர்களும் பரிசேயர்களின் மாய்மாலமான தாக்கத்தின் கீழாகத் தங்கள் வாழ்க்கையைக் கழித்தவர்களே என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவர்களே இஸ்ரவேலில் ஆளுகைசெய்தவர்களாகவும், போதித்தவர்களாகவும் இருந்தார்கள். நாம் ஏற்கெனவே மலைப்பிரசங்கத்தின் ஆய்வின்போது பார்த்தபடி, பரிசேயரின் பொய்யான போதனைகளைச் சரிப்படுத்தும்படியாகவே இயேசுவானவர் அதிகமான காரியங்களைச் சொல்லியிருக்கிறார். வேதபாரகர் பரிசேயரின் நீதியை விடவும் அவர்களுடைய நீதி அதிகமாயிராவிட்டால், அவர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் என்று அவர் தமது பேச்சைக் கேட்டவர்களிடம் சொன்னார் [பார்க்க, மத். 5:20]. அதாவது, வேதபாரகரும் பரிசேயரும் நரகத்துக்கே செல்லுகிறார்கள் என்று சொல்லுவதாகும். அவர் தம்முடைய பிரசங்கத்தின் முடிவில், அவர் தங்கள் வேதபாரகரைப்போலப் போதிக்காதபடியால் மக்கள் வியப்படைந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது [மத். 7:29].

நமது பிரசங்கத்தின் துவக்கத்தில் இயேசுவானவர் தாங்கள் விபசாரமே செய்துகொண்டதில்லை என்று சொல்லிக்கொண்டவர்களின் மாய்மாலத்தை வெளியரங்கமாக்கினார். அவர்கள் இச்சித்தார்கள், விவாகரத்துச் செய்துவிட்டு மறுமணம் செய்துகொண்டார்கள். இரண்டு பேரின் சரீரப்பிரகாரமான பாவச் செயலுக்கும் அப்பால் அவர் விபசாரத்தின் அர்த்தத்தை விரிவுபடுத்தினார். அவர் என்ன சொன்னார் என்பதை நேர்மையுள்ள எந்த மனிதனும் சற்றே சிந்தித்தால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இயேசுவானவரின் பிரசங்கத்துக்கு முன்னால் கூட்டத்திலிருந்த பலரும் ''எந்தக் காரணத்துக்காகவும்'' விவாகரத்துச் செய்வது நியாயமானது என்றே நினைத்திருப்பார்கள். துவக்கத்திலிருந்தே தேவனுடைய நோக்கம் இதைவிட அதிகமான தகுதி நிலையே என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசுவானவர் விரும்பினார்.

> விபசாரஞ் செய்யாதிருப்பாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக் கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் [மத். 5:27–32].





முதலாவதாக, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி தள்விவிடுதலைக் குறித்த இயேசுவானவரின் போதனை இச்சையைக் குறித்த அவருடைய போதனையைத் தொடர்ந்து வருவதைக் கவனியுங்கள். இயேசுவானவர் *இரண்டையும்* விபசாரம் என்று சொல்லி பிணைப்பை அதிகமாக்குகிறார். வேதாகமத்தின் இந்தப் பகுதி முழுவதுமாகப் பின்னப்பட்டுள்ள பொதுவான பிணைப்பை நாம் கண்டு கொள்ளுகிறோம். ஏழாவது கட்டளைக்கு உண்மையாகவே கீழ்ப்படிவது என்றால் என்ன என்பதைத் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் புரிந்து கொள்ளும்படி அவர் உதவுகிறார். அப்படியானால் அவர்கள் இச்சைப் படவும் கூடாது, விவாகரத்துச் செய்யவும் கூடாது, மறுமணம் செய்து கொள்ளவும் கூடாது.

அவருடைய பேச்சைக் கேட்ட யூதர்கள் எல்லோருமே ஏழாவது கட்டளை ஜெப ஆலயத்தில் வாசிக்கப்படுவதைக் கேட்டிருந்தார்கள். [எவருக்கும் தனிப்பட்ட வேதாகமம் கிடையாது]. அவர்கள் அதற்கான விளக்கத்தைக் கேட்டிருந்தார்கள், தங்களுக்குப் போதித்த வேதபாரகர், பரிசேயர் தங்கள் வாழ்க்கையில் அதை எப்படிச் செயல்படுத்தினார்கள் என்பதையும் கண்டிருந்தார்கள். இயேசுவானவர் அடுத்தபடியாக, ''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறினார். அதாவது, அவர் புதிய பிரமாணங்களைச் சேர்க்கப் போவதில்லை. தேவனுடைய ஆதி நோக்கத்தையே அவர் வெளிப்படுத்தப் போகிறார்.

முதலாவதாக, இச்சையானது பத்தாவது கட்டளையின் மூலமாகத் தெளிவாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. பத்தாவது கட்டளை இல்லாதிருந்தாலும் அதைக் குறித்துச் சிந்திக்கும் எவரும் தேவன் குற்றமாகச் சொல்லியிருப்பதைச் செய்யும்படி ஆசைப்படுவது தவறு என்பதை உணர்ந்திருப்பார்கள்.

இரண்டாவதாக, ஆதியாகமத்தின் துவக்க அதிகாரங்களிலிருந்தே திருமண உறவானது வாழ்நாள் முழுவதற்குமான ஒப்படைப்பு என்பதைத் தேவன் தெளிவுபடுத்தியிருந்தார். மேலும் இதைக் குறித்துச் சிந்திக்கும்

எவரும் விவாகரத்தும் மறுமணமும், *குறிப்பாக* மறுமணம் செய்வதற்காக விவாகரத்துச் செய்வதும் விபசாரத்தைப்போல இருக்கிறது என்ற முடிவுக்கே வந்திருப்பார்கள்.

இந்தப் பிரசங்கத்தில் இயேசுவானவர் மக்கள் இச்சையைக் குறித்த சத்தியத்தையும், எந்தக் காரணத்துக்காகவும் விவாகரத்துச் செய்தல், மறுமணம் இவை குறித்த சத்தியத்தையும் காணும்படி அவர்களுக்கு உதவிசெய்தார். அவர் இதுவரை இல்லாத, மறுமணத்தைக் குறித்த புதிய விதியை உருவாக்கவில்லை.

சபையில் எவரும் கண்களைப் பிடுங்கி எறிந்துபோடு, கையை வெட்டிப் போடு என்ற இயேசுவானவரின் கட்டளைகளை வார்த்தைக்கு வார்த்தை எடுத்துக்கொண்டு அதன்படி நடந்துகொள்ளவில்லை. ஏனென்றால் இப்படி வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் எடுப்பது வேதாகமத்தின் எஞ்சிய பகுதிக்கு முரண்பாடாக இருக்கிறது. பாலுறவு சம்பந்தமான சோதனைகளைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தை வலுவாக வலியுறுத்தவே இவை பயன்படுகின்றன. என்றாலும் சபையில் பலர் மறுமணம் குறித்த இயேசுவின் போதனைகளுக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி அர்த்தம் எடுப்பது வேதாகமத்தின் எஞ்சிய பகுதிகளுக்கு முரண்பாடாக இருக்கிறது என்பதைக் கூட அவர்கள் கவனிப்பதில்லை. தமது பேச்சைக் கேட்பவர்கள் சத்தியத்தைத் தெளிவாக எதிர்நோக்க வேண்டும் என்பதே இயேசுவின் இலக்காக இருந்தது. விவாகரத்துக்களின் எண்ணிக்கை குறைய வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர் இதைச் சொன்னார். அவரைப் பின்பற்றுகிறவர்கள் இச்சையைக் குறித்த அவருடைய போதனைகளை முழு இருதயத்தோடும் ஏற்றுக்கொள்ளுவார்களானால், அவர்களுக்கு நடுவே ஒழுக்கச் சீர்கேடு காணப்படாது. ஒழுக்கச் சீர்கேடு இல்லாவிட்டால் விவாகரத்துக்கான சட்டபூர்வமான ஆதாரம் இருக்காது. தேவன் ஆதியில் நோக்கம் கொண்டதுபோல விவாகரத்துக்கள் இருக்காது.

### ஒருவன் எப்படித் தனது மனைவியை விபசாரம்பண்ணும்படி செய்கிறான் ?

''வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை *விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்''* என்று இயேசுவானவர் சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். அவர் மறுமணத்தைக் குறித்த ஒரு புதிய பிரமாணத்தைக் கொண்டுவரவில்லை என்பதை இதன்மூலமாக நாம் அறிகிறோம். சரியான காரணம் இல்லாமல் தன் மனைவியை விவாகரத்துச் செய்பவனின் பாவத்தைக் குறித்த சத்தியத்தையே அவர் வெளிப்படுத்துகிறார். அவன் ''அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்.'' இயேசுவானவர் மறுமணம் செய்வதை விபசாரம் என்று சொல்லுகிறபடியால், அவர்





மறுமணத்தைத் தடைசெய்கிறார் என்று சிலர் கூறுகிறார்கள். இது அபத்தமானதாகும். விவாகரத்துச் செய்பவனின் பாவமே வலியுறுத்தப் படுகிறது. அவன் இப்படிச் *செய்வதின்* காரணமாக அவனுடைய மனைவிக்கு மறுமணத்தைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடுகிறது. இது அவளைப் பொருத்தவரையில் பாவமல்ல, ஏனென்றால் அவள் அவளுடைய கணவனின் சுயநலத்தினால் பாதிக்கப்பட்டவளாக இருக்கிறாள். என்றாலும், தேவனுடைய பார்வையில், அவன் தனது மனைவிக்கு மறுமணத்தைத் தவிர வேறு எந்த வாய்ப்பையும் கொடுக்காமலிருககிறபடியால், இது மற்றொருவனின் படுக்கையில் அவன் அவளைப் பலவந்தமாகத் தள்ளுவது போலிருக்கிறது. இப்படியாகத் தான் விபசாரம் செய்ய*வில்லை* என்று நினைக்கும் ஒருவன் *இரட்டை* விபசாரத்துக்குத் – தன்னுடையதும் தன்னுடைய மனைவியினுடையதும் –குற்றவாளியாக ஆகிறான்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மனைவி விபசாரக் குற்றம் புரிந்திருப்பதாக இயேசுவானவர் சொல்லியிருக்க முடியாது. ஏனென்றால் இது முற்றிலும் நியாயமில்லாத காரியமாகும். பாதிக்கப்பட்ட மனைவி மறுபடியும் திருமணம் செய்துகொள்ளாமலிருந்தால் இது அர்த்தமில்லாததாகவும் இருக்கும். அவள் மறுமணம் செய்யாதிருக்கும் வரையில் அவள் ஒரு விபசாரி என்று தேவனால் எப்படிச் சொல்ல முடியும்? இதில் அர்த்தமே இருக்காது. எனவே தேவன் அந்த மனிதனை அவனுடைய சொந்த விபசாரத்துக்கும் மனைவியின் விபசாரத்துக்கும் குற்றவாளியாக ஆக்குகிறார். ஆனால் மனைவியைப் பொருத்தவரையில் அது விபசாரமே கிடையாது. அது சட்டபூர்வமான மறுமணமாகும்.

''அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்'' என்ற இயேசுவானவரின் அடுத்த வார்த்தைகள் சொல்லுவது என்ன? அர்த்தமுள்ள இரண்டே சாத்தியக் கூறுகள் மட்டுமே உள்ளன. ஒன்று, தான் விபசாரமே செய்யவில்லை என்று நினைக்கும் மனிதனுக்கு விரோதமாக அவர் மூன்றாவது விபசாரக் குற்றத்தைச் சுமத்தலாம். அல்லது விபசாரக் குற்றம் இல்லாமல் தன்னை மணப்பதற்காகத் தன் கணவனை விவாகரத்துச் செய்யும்படி ஒரு பெண்ணைத் தூண்டும் ஒரு மனிதனைக் குறித்து இப்படிச் சொல்லியிருக்கலாம். தள்ளிவிடப்பட்ட ஒரு பெண்ணை மணந்துகொள்ளும் பூமியிலுள்ள எவனும் விபசாரம் செய்கிறான் என்று இயேசுவானவர் சொல்லியிருப்பாரானால், கடந்த பல நூற்றாண்டுகளாக மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி தள்ளிவிடப்பட்ட பெண்ணை மணந்துகொண்ட ஒவ்வொரு இஸ்ரவேலனும் இந்தக் குற்றத்துக்கு ஆளானவர்களாக இருப்பார்கள். உண்மையில், இயேசுவானவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி தள்ளிவிடப்பட்ட பெண்ணை மணந்துகொண்டிருக்

கும் ஒவ்வொருவரும் அந்தக் கணத்தில்தானே குற்றவாளியாக ஆகியிருப்பார்கள். அந்தக் கணத்தில் இயேசு தேவனுடைய நியாயப் பிரமாணத்தை மாற்றியதாக ஆகியிருக்கும். மேலும், வருங்காலத்தில் தள்ளிவிடப்பட்ட பெண்ணை மணப்பது பாவமல்ல என்று கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய வார்த்தையை நம்பி, அப்படிப்பட்டதொரு பெண்ணை மணப்பவனும் விபசாரக் குற்றத்துக்கு ஆளாகியிருப்பான்.

ஆனால் தள்விவிடப்பட்ட பெண்ணை மணக்கிற ஒருவனைப் பாராட்டும்படியாகவே வேதாகமத்தின் முழுச் சாராம்சமும் என்ன வழிநடத்துகிறது. அந்தப் பெண் தனது கணவனின் சுயநலத்தினால் பாதிக்கப்பட்டவளாக இருப்பாளானால், அவளை மணந்துகொண்டவனை விதவையை மனந்துகொண்டவனைவிட அதிகமாகப் பாராட்ட வேண்டும். அவள் தனது விவாகரத்தினால் ஓரளவு குற்றவாளியாக இருப்பாள் என்றால், அவளுடைய கடந்தகாலத்தை மன்னித்து, அவளை ஏற்றுக்கொண்ட அவனுடைய கிருபைக்காகவும், கிறிஸ்துவைப்போன்ற குணாதிசயத்துக்காகவும் அவனை அதிகமதிகமாகப் பாராட்டுவேன். வேதாகமத்தை வாசிக்கும் ஒருவர், பரிசுத்த ஆவியானவரை உள்ளுக்குள் வாசம்பண்ணும்படி கொண்டிருக்கும் ஒருவர் இயேசுவானவர் விவாகரத்து செய்துகொண்டவர்களை மணப்பதற்குத் தடை விதித்திருக்கிறார் என்ற முடிவுக்கு ஏன் வர வேண்டும்? தேவனுடைய நீதி பாதிக்கப்பட்ட ஒருவரை ஒருபோதும் தண்டிக்காது. இப்படியிருக்கும்போது பாதிக்கப்பட்ட பெண் மறுமணம் செய்து கொள்ளுவதைத் தடைசெய்து அவர் அவளை எப்படித் தண்டிப்பார்? இப்படிப்பட்டதொரு பார்வை எப்படிச் சுவிசேஷத்துக்குப் பொருத்தமாக இருக்கும்? சுவிசேஷமானது மன்னிப்பையும், மனந்திரும்பிய பாவிகளுக்கு மறுவாய்ப்பையும் கொடுக்கிறது அல்லவா?

**சுருக்கம்**

விவாகரத்து என்றாலே இருவரில் யாரோ ஒருவர் செய்ததிலோ அல்லது இருவரும் செய்ததிலோ பாவம் இருக்கிறது என்றுதான் வேதாகமம் தொடர்ந்து சொல்லுகிறது. ஒருவரும் விவாகரத்து செய்து கொள்ளுவது தேவனுடைய நோக்கமல்ல. ஆனால் ஒழுக்கச் சீர்கேடு நடக்கும்போது இரக்கத்தோடு பாதிக்கப்பட்டவர் விவாகரத்துப் பெறுவதற்கான வழியை அனுமதித்திருக்கிறார். விவாகரத்துப் பெற்றவர்கள் மறுமணம் செய்வதற்கும் அவர் இரக்கத்தோடு வழிவகை செய்திருக்கிறார்.

மறுமணத்தைக் குறித்த இயேசுவானவரின் வார்த்தைகளைத் தவிர, வேதாகமத்தை வாசிக்கும் எவரும் மறுமணம் ஒரு பாவம் என்று நினைத்திருக்க மாட்டார்கள் [பழைய உடன்படிக்கையில் அபூர்வமான இரண்டு சந்தர்ப்பங்களிலும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களுடைய





விவாகரத்துக் குறித்த ஒரு சந்தர்ப்பத்திலும் மட்டுமே மறுமணம் தடை செய்யப்பட்டிருக்கிறது]. என்றாலும், இயேசுவானவரின் போதனையை வேதாகமத்தின் எஞ்சிய போதனைகளோடு இசைவாக்கும் வழியையும் நாம் கண்டுபிடித்திருக்கிறோம். இயேசுவானவர் மறுமணம் குறித்த தேவனுடைய பிரமாணத்துக்குப் பதிலாக, எல்லா மறுமணத்தையும் தடைசெய்யும் இன்னும் கண்டிப்பான ஒரு பிரமாணத்தை அறிமுகம் செய்யவில்லை. ஏற்கெனவே விவாகரத்து செய்து நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து மறுமணம் செய்து கொண்டிருப்பவர்களால் இது பின்பற்ற முடியாத ஒரு பிரமாணமாக ஆகிவிடும். இது அளவில்லாத குழப்பத்தை ஏற்படுத்தி, மக்கள் தேவனுடைய மற்றப் பிரமாணங்களையும் மீறும்படி செய்துவிடும். அவர் மக்கள் தங்கள் மாய்மாலத்தைக் காணும்படி உதவிசெய்யவே அப்படிக் கூறினார். தாங்கள் ஒருபோதும் விபசாரம் செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள் தங்கள் இச்சையின் காரணமாகவும், விவாகரத்து குறித்த தாராளமான மனோபாவத்தினாலும் வேறு வழிகளில் தாங்கள் விபசாரம் செய்வதை அவர்கள் காண வேண்டும் என்பதற்காகவே அவர் அப்படிச் சொன்னார்.

முழு வேதாகமமும் போதிக்கிறபடி, அவர்களுடைய பாவம் எதுவாக இருந்தாலும் மனந்திரும்பிய பாவிகளுக்கு மன்னிப்பு அருளப்படுகிறது. விவாகரத்து செய்துகொண்ட மக்கள் உட்பட, பாவிகளுக்கு இரண்டாம் மூன்றாம் வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. மற்றொரு விசுவாசியிடமிருந்து விவாகரத்துப் பெற்றுள்ள விசுவாசியைத் தவிர மற்ற எல்லோரும் மறுமணம் செய்துகொண்டாலும் அது புதிய உடன்படிக்கையின்படி பாவம் அல்ல. ஆனால் ஒரு மெய்யான விசுவாசி ஒருபோதும் விவாகரத்துக்கான உண்மையான காரணமான ஒழுக்கச் சீர்கேட்டில் ஈடுபட மாட்டார் என்கிறபடியால், அவர்கள் விவாகரத்து செய்துகொள்ளுவதற்கு வாய்ப்பே கிடையாது. அப்படி அபூர்வமாகப் பிரிய நேரிட்டாலும், இருவரும் தனியாக இருந்து, மறுபடியுமாக ஒப்புரவாகுதலை நாட வேண்டும்.

